**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**OS No.1/2021**

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பையன் | தந்தை பெயர் | குட்டையகோனார் |
| கிராமம் | பல்லவராயன்பட்டி | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 77 | தொழில் | விவசாயம் |

நாள் : 10.11.2023

வா.சா.1

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 3 பேர். என்னுடைய சகோதரி பழையாத்தாள் தற்சமயம் உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவருடன் உயிருடன் இருந்த வரை என்னுடன் பேச்சுவார்த்தையில் இருந்தார் என்றால் சரிதான். குடும்பத்தில் நான் தான் மூத்தவர் என்றால் சரிதான். என்ன படித்திருக்கிறீர்கள் என்றால் 2 வது, 3 வது படித்திருக்கிறேன், தமிழ் மட்டும் படிக்க தெரியும்.

2) பொது குடும்ப சொத்து எவ்வளவு என்றால் 10 ஏக்கருக்கு மேல் இருக்கும். குடும்பத்தில் மூத்தவர் என்பதால் சொத்துக்களை நான் தான் மேற்பார்வை செய்து வந்தேன் என்றால் சரியல்ல, என் தந்தை. நான் தான் மேற்பார்வை செய்து வந்தேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் பெயரில் 1974 மற்றும் 1981 ஆம் வருடங்களில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் நான் தனியாக சம்பாதித்து வாங்கியிருந்தேன். நான் என்ன வேலை செய்தேன் என்றால் விவசாய வேலை செய்தேன். 1974 மற்றும் 1981 க்கு முன்பாக எனது பெயரில் எந்த சொத்துக்களும் இல்லை என்றால் சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1941 இருக்கலாம். எனக்கு விபரம் தெரிந்த நாள் முதல் விவசாய வேலை தான் செய்து வருகிறேன் என்றால் சரிதான், இடையில் ஊராட்சி மன்ற தலைவராக 1970 ஆம் ஆண்டு இருந்துள்ளேன்.

2.1) அப்போது என் தந்தை உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய 1974 மற்றும் 1981 ஆண்டுகளில் நான் தனியாக சொத்து வாங்கிய காலத்தில், எங்கள் குடும்பச் சொத்தில் பாகபிரிவினை நடைபெறவில்லை என்றால் சரிதான். 1970 ஆம் ஆண்டிற்கு முன்பாகவும் நான் விவசாய வேலை தான் செய்து வந்தேன் என்றால் சரிதான், மரம் வெட்டி வியாபாரமும் செய்து வந்தேன். பொது குடும்ப சொத்தில் இருந்து தான் விவசாயம் செய்தேன் என்றால் சரிதான்.

2.2) என் பெயரில் சொத்து கிரையம் பெற்ற போது பொது குடும்பத்தில் இருந்து வரப்பெற்ற வருமானத்தை கொண்டு தான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. 1994 ஆம் வருடம் செய்து கொண்ட பாகபத்திரத்தில் பொது குடும்ப சொத்துக்கள் அனைத்தும் கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல, பொது குடும்ப சொத்துக்களும் நான் கிரையம் பெற்ற சொத்துக்களும் அதில் காணப்பட்டது. அவ்வாறு என்னுடைய பிராதிலோ முதல் விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 1994 ஆம் வருடம் பாகப்பிரிவினை பத்திரம் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான், என் தம்பி ராமச்சந்திரன் தான் வாங்கினார். பிரதிவாதி எந்த பத்திரம் வாங்கவில்லை, என்றாலும் என் பெயரில் நான் தான் வாங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல, நாங்கள் இருந்தோம், அவர் தான் வாங்கினார்.

3) வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினை பத்திரத்தில், என் சகோதரி பழையாத்தாள் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் "அ" அட்டவணை சொத்தில் 14 அயிட்ட சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எனக்கு மதிப்பு மிக்க சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனக்கு சிறிது கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்ட ஒரு மாத காலத்திற்குள் "அ" அட்டவணை சொத்தை நான் அடைமானம் வைத்தேன் என்றால் 5, 6 மாதத்திற்குள் வைத்தேன்.

4) பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சரத்துக்களை நான் தான் பத்திர எழுத்தரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல, என் தம்பி பிரதிவாதி தான் சொன்னார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் நாங்கள் இருவரும் சேர்ந்து தான் சொல்லியுள்ளோம் என்றாலும் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுவதற்கு முன்பாக நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்ததால் எனக்கு அனைத்து விபரங்களும் தெரியும் என்றாலும் எனவே நான் தான் பத்திர எழுத்தரிடம் விபரங்களை சொன்னேன் என்றாலும் சரியல்ல, என் தம்பி என்னை விட கூடுதலாக படித்தவர், அவர் தான் விபரங்களை சொன்னார்.

4.1) 1994 ஆம் வருடத்தைய பத்திரத்தில் குடும்ப பொது சொத்தில் நத்தம் மனையிடங்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் அப்போது நத்தம் மனை முழுவதும் ஒரே கிராமமாக உட்பிரிவு செய்யப்படாமல் இருந்தது, என் தந்தை பெயரில் அனுபவம் இருந்தது, அதனால் சொல்லப்படவில்லை . தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு விட்டதா என்றால் பாகப்பிரிவினைக்கு பின்னர் உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது. அது யாருடைய பெயரில் உள்ளது என்றால் என்னுடைய பெயரில் உள்ளது, அவரவர் தனித்தனியாக தான் அனுபவம் செய்து வருகிறோம். பிரதிவாதியின் வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை . பாகப்பிரிவினைக்கு முன்பாகவே பொது உறுப்பினர் என்ற அடிப்படையில் எனது பெயருக்கு

பட்டா ஏற்பட்டுள்ளது என்றாலும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4.2) வா.சா.ஆ. **1** 1994 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்து பிரிவினை யாருடைய முன்னிலையில் பேசப்பட்டது என்றால் பெரியவர்கள் வைத்து பேசி முடிக்கப்பட்டது. பஞ்சாயத்து பேசியவர்கள் யார் என்று சொல்ல முடியுமா என்றால் பழனியாண்டி கோனார், ராமசாமி கோனார், தங்கராசு செட்டியார், ரெங்கசாமி, கருவக்கோனார் ஆகியோர்கள் இருந்தார்கள், ஆனால் அனைவரும் தற்போது இறந்து விட்டார்கள். நான் குறிப்பிட்டபடி அனைவரும் இருந்திருந்தால் சாட்சி கையெழுத்து செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி இவ்வழக்கில் என்ன எதிர் வழக்குரை கொடுத்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியும், அவர் பாகம் பிரிக்கவில்லை, சொத்து அவருக்கு குறைவாக கொடுத்துவிட்டார் என்று கட்சியாடுகிறார். அவரது கட்சிக்கு நான் எதிர் வாதமாக மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பாகம் கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன். அவ்வாறு என்னுடைய பதில் மனுவில் எதுவும் நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

5) என் சகோதரி பழையாத்தாள் பாகப்பிரிவினை கோரி நடவடிக்கை எடுத்தரா என்றால் இல்லை. பொது குடும்ப சொத்தில் பெண்களுக்கு சரிசம பங்கு உண்டு என்பது எனக்க தெரியும் என்றால் சரியல்ல, என் தந்தை உயிருடன் இருக்கும் போது அனைத்தையும் செய்து விட்டார். பொது குடும்ப சொத்தில் இருந்துதான் செய்திருப்பார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவில் கடன் வாங்குவதற்காக ஏற்பட்டது என்றால் சரியல்ல.

6) பொது குடும்ப சொத்துக்களை பொறுத்து இதுநாள் வரை பாகம் பிரிக்கப்படிவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. **2** முதல் **5** வரையான ஆவணங்கள் பொது குடும்ப சொத்துக்களை வைத்து வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.**1** பொது குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்து பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, முழுவதுமாக பிரிக்கப்பட்டுவிட்டது. 1995 ஆம் ஆண்டு எனக்கு வா.சா.ஆ.**1** உள்ள "அ" அட்டவணை சொத்துக்களை பொறுத்து நான் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் தான் பொது குடும்ப கர்த்தாவாக இருந்து பொது குடும்பத்திற்காக சொத்துக்களை வாங்கினேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் ஏற்கனவே குட்டையன் கோனார் பெயரில் பட்டா எண் 170 ல் தான் உள்ளது என்றால் சரிதான், 1985 இல் நான் வாங்கிய சொத்துக்களும் யுடிஆர் இல் என் அப்பா பெயரில் சேர்க்கப்பட்டுவிட்டது. நான் பொது குடும்ப வருமானத்தை வைத்து வாங்கியதால் தான் என் தந்தை பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் மானாவாரி, வருமானம் ஈட்டக் கூடிய சொத்துக்கள் என்றால் சரிதான். 1994 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர் தான்

கடன் வாங்கி ஆழ்துளை கிணறு போடப்பட்டுள்ளது என்றால் என் பெயரில், வங்கியில் நான் தான் போட்டுள்ளேன்.

7) பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் அரசு பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக உள்ளார். அவர் எத்தனை வருடமாக வேலை பார்த்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் விவசாய வேலை செய்து குடும்பம் மேற்பார்வை செய்து வந்தேன் என்றால் என் அப்பா இருக்கும் வரை கூட்டுக்குடும்பமாக தான் இருந்தோம், அவர் தான் பார்த்து வந்தார், அவர் இறந்த பின்னர் 3 வருடம் கழித்து, பாகம் பிரித்து, நான் தனியாக என் குடும்பத்தை பார்த்து வந்தேன்.

8) என்னுடைய வழக்குரை, பிரதிவாதி தாக்கல் செய்த எதிரிடை வழக்கிற்கு, எதிருரை, மற்றும் முதல் விசாரணை அனைத்தும் நான் சொல்லி தான் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள, முதல் விசாரணையில் 16 ஆம் பத்தியில் நம்புரான் பட்டியில் கண்டுள்ள புல எண்கள் 17/4, 20/4, 25/3 மற்றும் மனையிடங்கள் 317/46, 317/33 ஆகிய சொத்துக்கள் ஆரம்பத்தில் நத்தம் வகைபாட்டை சேர்ந்த சொத்துக்கள், 1994 இல் பாகப்பத்திரம் போடும் போது, அனைத்தும் நத்தமாக இருந்ததால் பாகம்பிரித்துக்கொள்ள இயலவில்லை என்றால் சரிதான். இந்த விபரத்தை என்னுடைய வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான், வா.சா.ஆ.1 இல் எழுதாததால் அதை நான் சொல்லவில்லை.

9) வா.சா.ஆ. **1** இல் கண்டுள்ளபடி "ஆ" அட்டவணை சொத்தான பிரதிவாதிக்கு, 4 அயிட்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கடன் வாங்குவதற்கு 7 ஏக்கருக்கு மேல் இருக்க வேண்டும் என்று சொல்லி, இந்த பிரதிவாதியை ஏமாற்றி, இந்த வா.சா.ஆ. 1 -ஐ ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, அதை பொறுத்து எந்த பாகப்பிரிவினையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நம்புரான்பட்டியில் உள்ள சொத்தை நான் வழக்கிற்காக நான் நத்தம் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவை மானாவாரி நன்செய், என் அப்பா பெயரில் தான் இருந்தது.

10) பிரதிவாதி குடியிருக்கும் இடத்திற்கான பட்டா என் பெயரில் உள்ளது என்றால் சரிதான், அதற்கு உட்பிரிவு செய்யப்பட்ட பின்னர், என்பெயரில் பட்டா வந்து விட்டது, ஆனால் அவரவர் தனித்த அனுபவத்தில் தான் இருந்து வருகிறோம். அந்த இடத்திற்கு பிரதிவாதிக்கு மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான், அதற்கு நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அவர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். வா.சா.ஆ. 1 ஏற்பட்ட போது என் சகோதரி இல்லை என்றால் அவர் வெளியூரில் இருந்தார், அவர் பாகமும் கேட்கவில்லை. என் சகோதரி எப்போது இறந்தார் என்றால் 2018 இல் இறந்தார், இறக்கும் வரை அவர் பாகம் கேட்கவில்லை. என் சகோதரி பாகம் கேட்டார் என்றாலும் நான் கேட்கவில்லை

என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.  வா.சா.ஆ. 6 இல் என்ன பசலி என்று எதுவும் தாக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

11) வா.சா.ஆ. **8** -2008, 2011 இல் வாங்கப்பட்டது என்றாலும் வழக்கிற்காக நாங்கள் தயார் செய்தது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. **9** இல் சார்பதிவாளரின் முத்திரை காணப்படவில்லை என்றால் அது கணினி பதிவிறக்க நகல். வா.சா.ஆ. **10** ஆன புகார் மனு நாங்களாக தயார் செய்தது என்றால் சரியல்ல.  வா.சா.ஆ. **13, 15, 16,17** ஆகிய வரி ரசீதுகள் நாங்களாக தயார் செய்தது என்றால் சரியல்ல.

**12)** பிரதிவாதியை வேண்டும் என்றே ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும் நான் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் பொது குடும்ப சொத்துக்களில் சிலவற்றை பாகம் பிரிவினைக்கு உட்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல.